RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt25110

OPEN ACCESS

# இலக்கியங்களில் முருகன் ஆலயங்கள்

ஆ. சித்ரா தேவி [அ, *]

[அ] தமிழ்த்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-21, தமிழ்நாடு, இந்தியா

# Murugan Temples in Literature

A. Chitra Devi [a, *]

[a] Department of Tamil, Madurai Kamaraj University, Madurai-21, Tamil Nadu, India

* Corresponding Author: rct100392@gmail.com

Received: 02-12-2024
Revised: 12-01-2025
Accepted: 20-01-2025
Published: 27-01-2025

**ABSTRACT**

Lord Murugan is an important deity worshipped since ancient times. He is also revered as the deity of Kurinji region during the Sangam Age. One of the ancient texts, Tolkappiyam, refers to Lord Muruga as Seyon. Sangam literary works glorify him as "the red god seated on a blue peacock", "the one who is young and bright" and the "favourite god of the Tamils". Thirumurukāṟṟuppaḍai is one of the Sangam literature in which Lord Muruga is the singing leader of his six-padai veedu. In this book, Murugan is referred to as Murugu. It refers to 'Sevvel' and 'Neduvel' in the Paripadal. The temples of Lord Muruga and their significance are known as follows.

**Keywords:** Lord Murugan Sangam Age, Tamil Tradition

## முன்னுரை

பண்டைய காலம் தொட்டு வணங்கப்படும் ஒரு முக்கிய தெய்வம் முருகன். இவர் சங்க காலத்தில் குறிஞ்சி நிலப்பகுதியின் தெய்வமாகவும் போற்றப்படுகிறார். பழங்கால நூல்களில் ஒன்றான தொல்காப்பியம் முருகனை சேயோன் எனக் குறிப்பிடுகிறது. சங்க இலக்கியப் படைப்புகள் "நீல மயிலின் மீது அமர்ந்திருக்கும் சிவப்புக் கடவுள்" என்றும் 'இளமையாகவும் பிரகாசமாகவும் இருப்பவன்" மற்றும் "தமிழர்களின் விருப்பமான கடவுSSள்" என்றும் போற்றுகிறது. சங்க கால இலக்கியங்களுள் ஒன்றான திருமுருகாற்றுப்படை முருகப்பெருமானைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு அவனது ஆறுபடைவீடுகளையும் பாடும் காவியமாக அமைந்திருக்கிறது. இந்நூலில் முருகன் முருகு' என்று குறிப்பிடப்படுகின்றார். பரிபாடலில் 'செவ்வேல்' என்றும் நெடுவேல் என்றும் குறிப்பிடுகிறது. இத்தகு சிறப்பு மிகு பெயர்களால் போற்றப்படும் முருகனின் திருத்தலங்கள் மற்றும் அவற்றின் சிறப்பு குறித்து பின்வருமாறு அறியலாம்.

## திருப்பரங்குன்றம்

முருகக் கடவுளின் முக்கிய திருப்பதிகள் ஆறனுள் முதல் திருப்பதி திருப்பரங்குன்றம் ஆகும். நக்கீரர் மதுரையின் வர்ணனை குறித்து விரிவாக எடுத்துரைக்கின்றார். நெடும் மதில், கடைவீதி ஆகியவற்றை விரிவாக எடுத்துரைப்பவர். "உலகம் உவப்ப வலன் ஏர்புதிரிதரு"என்று துவங்கி" குன்று ஆர்ந்து உறைதலும் உரியன் அதா அன்று" என்று எழுபத்தேழு வரிகளில் நக்கீரர் பாடிப்பரவசம் அடைந்துள்ளார்.

இக்குன்றத்து கோயிலுக்கு திருவிழாக் காலத்தில் பாண்டிய மன்னன் தனது நான்கு வகைச் சேனைகளுடன் சென்று வழிபடுவது ஒரு மரபாக இருந்திருக்கின்றது.

"மாடலி மறுகிற் கூட குடவயின்

இருஞ்சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த

முள்தாள் தாமரை துஞ்சி வைகறைக்

கள்கமழ் அநய்தல் ஊதி ஏற்படக்

கண்போல் மலர்ந்த காமரு சுனைமலர்

அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்

குன்றமர்ந்து உறைதலும் உரியன்" திருமுருகு, பா. வரி 71-77

என திருப்பரங்குன்றத்து இயற்கையை நக்கீரர் பாடுகிறார். முருகக் கடவுள் தெய்வயானையம்மையை மணந்த தலம். நக்கீரர் பூதத்திடம் சிக்கிக் கொண்டு முருகன் அருளால் விடுதலை பெற்ற நிகழ்வை

"பழுத்தமுது தமிழப்பலகை பாருக்கு மொரு

கவிப்புலன் இசைக்குருவ

வரைக்குகையை யிடித்து வழி காணும்

மயில் நடத்து குகன் வேலே" திருப்புகழ், பா. எ. 306

அருணகிரியார் எடுத்துரைக்கின்றார்.

திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற திருமணத்தில் பிரம்மன் திருமணத்தை முன்னின்று நடத்த, சூரியனும் சந்திரனும் இரத்தின தீபங்கள் தாங்கி நிற்கவும், உமையம்மையும் தென்னவர் கோன் பரமேஸ்வரனும் இணையாக நின்று வாழ்த்தவும், இந்திரன் தகப்பனார் கடடையாக தாரைநீர் வார்த்துக் கொடுக்கவும் தெய்வயானையை முருகன் கரம்பிடித்தார்.

"சுருதிமழை பதிலிற்றதியிடுஞ் சமுமுகனார்

சடங்கியற்றத் தோகை பாகன்

கருதிவிழி விருந்தருந்தக் கண்ணிறைந்த

மேனியான் கைந்நீர் வார்ப்பத்

தருதியெனக் கையேந்திப் பரிதிமதி

விளக்கேந்தத் தந்தி மானத

வருதியெனக் கைப்பிடித்துப் பரங்கிரியின்

மணந்தவனை வணக்கம் செய்வாம்

(திருப்பரங்கதிரிபுராணம், துதி)

முருகனின் இத்திருமண நாள் பங்குனி உத்திரநாள் ஆகும். இந்நாளை பெரிய திருவிழாவாக இன்றும் மக்கள் கொண்டாடி வருகின்றனர்.

மேலும், இத்திருத்தலம் பற்றி,

"கொடி நுடங்கு மறுகதிற் கூற் குடா அது

புல்பொறி மஞ்ஞை வெஞ் கொடி உயரிய

ஓடியா விழாவின் நெடியோன் குன்றம்" அகம், பா. எ. 149. பா. வரி. 12-16

"வன்கை வினைஞர் அரிபறையின் குரல்

துளிமழை பொழியந் தண்பரங்குன்றில்"

"ஓன்னார்த்தார்க் கடந்தடுP உமுரவுநீர் மாகொன்ற

வேன்வேலான் குன்றின்மேல் விளையாட்டும்" கலித்தொகை பா.எ.27.

"இருப்பரங்குறைத்திடும் எஃக வேலுடைப்

பொருப்பரங் குணர்வுறப் புதல்வி தன்மிசை

விருப்பரங் கமலரிடை விளங்கக் காட்டிய

திருபரங்குன்றமர் சேயைப் போற்றுவோம்"

எனத் தமிழ் இலக்கியங்களில் திருப்பரங்குன்றத்தின் பெருமையும் ஆலயச்சிறப்பும் முருகனின் அருளும் குறித்து உரைப்பனவற்றைக் காண முடிகின்றது.

## திருச்செந்தூர்

இராண்டாம் திருப்பதி திருச்சீரலைவாய் என்கிற திருச்செந்தூர் அறுபடைவீடுகளில் ஒன்றான திருச்செந்தூர் அலைவாய் என்றும், செந்தில் என்றும் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. விண்ணுயர்ந்த ஒன்பது கோபுரத் திருவாயில்கள் ஒன்பது நிலைகளும் மனிதனது மலங்களின் ஒன்பது வாயில்களைக் குறிக்கும் என்பர் அகமத்துறையாளர்கள்.

இத்தலம் குறித்து,

"நீடு வாழிய நெடுந்தகை தாழ்நீர்

வெண்டலைப் புணரி யலைக்குஞ் செந்தில்

நெடுவேல் நிலை இய காமர் வியன்றுறைக்

கடுவெளி தொகுப்ப வீண்டிய

வடுவாழ் எக்கர் மணலினும் பலவே" புறம், பா. எ. 55, பா.வரி.17-21

என புறநானூற்று இலக்கியத்தில் இத்தலம் பற்றி குறிப்பிவதைக் காணலாம்.

இப்பகுதியில் வாழ்ந்த ஒரு தேவதாசி திருமுருகனின் பக்தி கொண்டவர். நாள் தோறும் இத்திருக்கோயிலில் இரவில் செந்திலாண்டவன் மீது பாமாலைகளைப் பாடிப்பாடி பரமானந்தத்துடன் இறைவனைப் பள்ளியறைக்கு அனுப்புவித்து வழிபாடு முடித்த பின்னரே அவள் வீடு செல்வது வழக்கம்.

ஒருநாள், அவள் திரும்பி வீடுசெல்லும்போது, அவளது நகைகளைக் கவர்வதற்காகக் கள்வர்கள் இருவர் ஆயுதங்களுடன் பின்தொடர்ந்தனர்.

கள்வர் பின்தொடர்வதைக் கண்டறியாத பெருமாட்டி தன் கையிலிருந்து வெற்றிலைக் காம்பை கிள்ளி முருகா என்று உச்சரித்த வண்ணம் எறிந்துவிட்டுத் தாம்பூரம் போட்டாள்.

"கிள்ளி எறியப்பட்ட வெற்றிக்காம்பு, வேலாக மாறி,

கள்வர்களை மாய்த்ததாக ஒரு வரலாறும் இத்திருக்கோயில் பற்றி பேசப்படுவதுண்டு"

முத்துக்குமாரசுவாமி, செந்தமிழ் முருகன், பக்.264-265

இது போன்று இத்தலம் குறித்து அற்புதக் கதைநிகழ்வுகள் நிறைய வாய்வழியாகவும் இலக்கியங்கள் வழியாகவும் சொல்லப்படுகின்றன.

“சதுர்வேதி மங்கலத்தைச் சார்ந்த பெரும் புலவர் பகழிக்கூத்தர் சிறந்த முருகபக்தர் வயிற்று நோயால் வாடி வதங்கிப்போனார்.

ஓர் இரவுப்பொழுதில் திருமுருகன் பகழிக்கூத்தரது கனவில் தோன்றி பிள்ளைத்தமிழ் பாடுக எனப்பணித்தார்.

பெரும்புலவர் பகழியார் உடனே, "திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ்பாடி மகிழ்ந்தார்"

உடனே அவரின் வயிற்று நோய் தீர்ந்தது என்கிற அற்புதக்கதையோடு ஒரு இலக்கியம் உருவான கதையும் கூறப்படுகிறது.

## பழநி

மூன்றாவது திருப்பதி திருவாவினன்குடி பழநி. மூனறாவது படைவீடான திருவாவினன்குடி இது ஆவியர் குலயத்து வள்ளலான பேகனுடைய ஊர், இத்திருத்தலம் சங்க இலக்கியங்களில் பொதினி என வழங்கப்படுகிறது.

"முடிவுறழ்த் திணித்தோள் நெடு வேளாவி

பொன்னுடை நெடுநகர்ப் பொதினி அகம், பா.எ.161.

"முருகன் நற்போர் நெடு வேளாவி

அறுகோட்டியாங்கண் பொதினி யாளன்"

என இந்நகரம் பொதினி என்று வழங்கப்பட்டிருப்பதை அறிய முடிகின்றது. நக்கீரர் இக்குன்றம் குறித்து கூறும் பொழுது, முனிவர்களும் யோகிகளும் பல நாள் உணவு உட்கொள்ளாது உண்ணா நோம்ன்பிலிருந்து பெருந்தவம் செய்து, பெறுதற்கரிய பேற்றினைப் பெற்ற எல்லையில்லாப் பெருவாழ்வு வாழ்ந்ததாகவும், மாசில்லாத மகளிர்கள் யாழ்வாசித்துத் திருமுருகனை மகிழ்வித்ததாகவும் பிரம்மன் முதலிய பெரும் தேவர்களும் முப்பத்து முக்கோடி வானுலகத் தேவர்களும் இங்கு வந்து, பால சுப்ரமணியனிடத்துத் தம் குறைகளைத் தெரிவித்து விடுதி பெற ஒன்றாகக் கூடியிருந்த தலம் என்கிறார் நக்கீரர்.

"தாவில் கொள்கை மந்தையொடு சின்னாள்

ஆவினன்குடி அசைதலும் உரியன" திருமுருகு பா,வரி, 175-176

மலையரசன் மகளான உமையம்மையை தனது இடப்பாகத்தில் கொண்டுள்ள சிவபெருமான் திருவாவினன்குடியில் உறையும் முருகனே என்கிறார் அருணகிரியார்.

"திருவாவினன்குடி பங்காள ரெண்முது சீருரைத்

திருவாவினன்குடி குன்றுதொராடல் சென்ற

திருவாவினன்குடி கொண்டதன் கார்வரை செப்புமினே"

இத்தலத்து வீற்றிருக்கும் முருகனை வழிபட்டு அவனின் அருளைப் பெற விரும்பும் முனிவர்கள் "மரவுரியை உடையாக உடுத்தியவர். வலம்புரிச் சங்கை ஒத்த வெண்ணிற நரைமுடியினர். முக்காலமும் நீராடுதலால் மாசற்று விளங்கும் மேனியர் விரதம் மேற்கொண்டு பட்டினி கடத்தலால் உடம்பினுள்ள தசை வற்றி மார்பதின் எலும்புகள் எழுந்து தோன்றும் உடலமைப்பு உடையவர்.துன்பம் சிறிதும் அரியாத மன உறுதியை இயல்பாகப் பெற்றார். பல பகல்பொழுதுகள் உண்ணாமல் நோன்பால் கழித்தவர்கள் என்று நக்கீரர் முனிவர்களின் தோற்றத்தையும் செயல்களையும் விளக்குகிறார்.

## சுவாமிமலை

நான்காம் படைவீடான சுவாமிமலை குருகுமலை, திருவேரகம், ஏரகம், பூமிகிரி, சுந்தராசலம் என்னும் வேற்றுப்பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. தகப்பனுக்குப் பிள்ளை உபதேசம் செய்த தொன்மக்கதை நிகழ்ந்த தலம் நக்கீரர், இத்தலம் குறித்த செய்தியால் அந்தணர்கள் இறைவழிபாட்டுக்குறிய காலம் அறிந்து தவராது வழிபடுவர். எப்போதும் பூணூல் அணிந்திருப்பர். நாற்பத்தெட்டு ஆண்டுகள் நல்ல வேதம் கூறும் தவ வழியிலே பிரமசாரியத்தைக் கைக்கொண்டு கழித்தவர்கள் என்று குறிப்பிடுகிறார்.

"இவர்கள் நீராடிய ஈர உடையுடன் தலைமேல் குவித்த கையிமராகி, ஆறு எழுத்து மந்திரத்தை வாய்க்குள் கூறி, மணமுள்ள நறிய மலரைத்தூவி முருகனை வழிபட்டறை" திருமு.ப, 182,

இம்முறையில் அமைந்த வழிபாடு மலைநாட்டகத்தில் இன்றும் நடைபெறுகிறது.

"பொன்னங்கடுக்கைப் புரிசடையோன் போன்றிசைப்ப

முன்னம் பிரமம் மொழிந்தோனே"

என்று மேறகுருபரர் இத்தலத்தின் பெருமை குறித்துப் பாடியுள்ளார்.

"நீரகத் தெதனை நினையுமன் பினோர்

பேரகத் தமெரும் பிறவி நீத்திடும்

தூரகத் துருவமாந் தலைமை யெய்திய

ஏரகத் தறுமுக அடிகள் ஏத்துவாம்"

என்று கந்தபுரணம் இத்தலப்பெருமை உரைக்கின்றது. திருக்குடந்தை புராணத்தில்

"வரும்பிர பவமுதல் வருட தேவர்கள் திருவளர் அம்மலைச் செறிந்தபல் என்னும்

"அடிப்படி தெங்கங்காய் தகர்த்து

உருவளர் மலையிவர்ந்து" (முத்துக்குமாரசுவாமி, ப. செந்தமிழ் முருகன்,ப.313)

எனக் குறிப்பிடுகின்றார்.

## குன்றுதோறாடல்

திருமுருகன் வீற்றிருக்கும் அறுபடை வீடுகளில் திருத்தணிகை என்பது ஐந்தாம் படைவீடாகும். திருத்தணிகைமலை குன்றுதோறாடல் என்றழைக்கப்படுகிறது. நக்கீரர் குன்று ஆதொறு ஆடலும் நின்ற தன் பண்பே என்று பாடியிருக்கின்றார். வள்ளிநாயகியை முருகப்பெருமான் மணந்து மணக்கோலத்தோடு இங்கு காட்சி தருகின்றார். கச்சியப்பர் இத்தலத்தை மலைகளுள் சிறந்த மலை என்று குறிப்பிடுகின்றார்.

"விரையி பங்கொளும் போதினும் மிக்கபங் கஙம்போல்

துரையி பங்கொளும் நதிகளின் சிறந்தகங் கையைப் போல்

துரையி பங்கொளும் பதிகளிற் காஞ்சியத் தரும்போல்

வரையிடங்களில் சிறந்ததிற் தணிகைமால் வரையே"

மலர்களுள் செந்தாமரையும், நதிகளுள் கங்கை நதியும் நகரங்களுள் காஞ்சிபுரம் மலைகளுள் திருத்தணிகையும் உயர்ந்தது சிறந்தது என்கிறார்.

திருத்தணிகை வேலனின் சிறப்பைபும், புகழையும் தெய்வீகர் திருவருளயும் பற்றி நிறையப் பாடல்களைப் பாடி மகிழ்ந்திருக்கின்றார் இராமலிங்கர்,

"சீத மதியை முடித்தசடைச்

சுpவனார் செல்வத் திருமகனே

திருமாலுடன் நான் முகன்மகவான்

தேடிப் பணியுஞ் சீமானே

காதல் பிறத்தல் தவிர்த்தருநெஞ்

சரணாம் புயனே சத்தியனே

தணிகா சலமாந் தலத்தமர்ந்த

சைவ மணியே சண்முகனே" தணிகைப்புராணம், ப. எ. 90.

வள்ளிக்கிழங்குக் காட்டில் கிடைத்த காரணத்தால் அக்குழந்தைக்கு வள்ளி எனப் பெயர் சூட்டிவிழாவெடுத்து மகிழ்ந்த என்றும், வள்ளி வளர்ந்து பருவமடைந்த போது நம்பிராஜன் தன் குலமுறைப்படி வள்ளியைத் தினைப்புனக் காவலில் இருத்தியதையும் அவ்வழியே வந்த நாதர் வள்ளியின் பேரதைத் திருமுருகனிடம் எடுத்துக்கூறி அவளை மணமுடிக்க முருகனின் வேண்டிட முருகனும் வந்து தினைப்புனத்தில் காவல் கொள்ள வேடனாக வடிவெடுத்துப் பின்னர் வேங்கையாக மாறி, முதியவனாக மாறி, யானை முகத்தான் அருளால் வள்ளி நாயகியை மணமுடித்;த நிகழ்வு இத்தலத்தில் நடைபெற்றுள்ளது.

## பழமுதிர்சோலை

அறுபடைவீடுகளில் ஒன்றான பழமுதிர்சோலை மாலிருங்குன்றம், இருங்குன்றம், சோலைமலை, திருமாலிருஞ்சோலை, அழகர்கோயில் என்கிற பெயர்களால் அழைக்கப்படுகிறது.இத்தலம் சைவ வைணவம் இணைந்ததாக உள்ளது.

"நாறிணர்த் துழாயோன் நல்கின் அல்லதை

ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்

அரிதிற்பெறு துறக்கம் மாலிங்குன்றம்

எளிதிற்பெற உரிமை ஏத்தும் சிலம்ப"

நாறிணர்த் துழாயோன் என்னும் சொற்றொடர் மணம் வீசுகின்ற துளசி மாலையுடையவன் என்ற பொருளைத் தருகிறது. துளசி மாலை அணிபவன் திருமால். ஆகவே இத்தலத்தில் முருகனின் மாமனாகிய திருமாஞ்சோலையில் வைணவக் கடவுளான திருமாலும் குடிக்கொண்டிருக்கின்றார் என்னும் கருத்தையும் அறிய முடிகின்றது. இத்தலம் குறித்து கச்சியப்பர்

"எழமுதிரைப்புனத்து இறைவி முன்புதன்

கிழமுதிர் இளநலம் கிடைப்ப முன்னவன்

மழமுதிர் களியென வருதல் வேண்டிய

பழமுதிர் சோலையம் பகவற் போற்றுவம்"

காடும், குன்றும், அருவியும் காண்போர் மனத்தைக் கவர்வதாக உள்ளது என்பார்.

## முடிவுரை

தமிழ் கடவுளான முருகனின் ஆலயங்கள் குறித்து முதன் முதலில் திருமுருகாற்றுப்படை எடுத்துரைப்பதையே காணமுடிகிறது. முருகப் பெருமானின் திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை ஆகிய திருத்தலங்களில்

எழுந்தருளியிருக்கின்ற முருகனின் தலச்சிறப்புகளையும் தலப்புராணங்கள் மற்றும் அவை குறிப்பிடப்படும் செய்திகளையும் இக்கட்டுரை வழியாக அறிந்து கொள்ள முடிகின்றது.

## References

அமிர்தலிங்கம், த., (2005) திருக்கோயில், இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு, சென்னை.

கச்சியப்ப சிவாச்சார்ய சுவாமிகள் (1985) கந்த புராணம், காசிமடம், திருப்பனந்தாள்.

குமரகுருபர் (1987) முத்துக்குமாராசாமி பிள்ளைத்தமிழ், கழக வெளியீடு, சென்னை.

சிற்பிபாலசுப்பிரமணியம் (2001) இராமலிங்க வள்ளலாரின் அருட்பா அமுதம், சாகித்திய அக்காதெமி, ரவீந்திரபவன், புதுதில்லி.

செங்கல்வராயன்பிள்ளை. வா.சு (1950) திருத்தணி, சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்,திருத்தணி.

செயபால் இரா. (1981) அகநானூறு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

விசுவநாதன் அ. (2004) - கலித்தொகை, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2025. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License